www.tamilarangam.net



பயன்படுத்துகின்றனர். அரசியல் ரீதியில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் அளவிற்கு அவர்கள் பலம் பெற்றுவிட்டார்களா? என்பது இன்னமும் கேள்விக்குறியே. ஆனால் சிறீலங்கா அரசியலில் தீர்மானகரமான ஒரு சக்தியாகவும், அரசை ஆட்டம் காணச் செய்யும் சக்தி பெற்றவர்களாகவும் பலம் பெற்றுவிட்டனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தநிலையில் தான் புதிய ஜனாபதி பதவி ஏற்க இருக்கிறார். நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவேண்டி சட்ட விரோதமான ஆயுதங்களைக் களைய வேண்டியிருப்பதே புதிய ஜனாதிபதியின் முதற்பணியாக இருக்கக்கூடும். இதில் அவர் எந்தளவு வெற்றியீட்டுகிறார் என்பதைப் பொறுத்தே சிறீலங்கா அரசின் ஸ்திரத்தன்மை தங்கியிருக்கிறது எனலாம்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இல்லை என்பது உண்மையானதாகும். எனினும் வெளிமையாக சிறீலங்கா அரசியலில் விதைக்கப்பட்ட இனவாதத்திற்குப்பதிலாக இன ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாடு என்பன போன்றவை பிரஸ்தாபிக்கப்பட்டது அதிசயமானது. ஐ. தே. கட்சியின் 11 வருட ஆட்சியின் அவலத்தை அனுபவித்தவர்கள் பிரேமதாஸாவை பிரேமையுடன் நோக்கமாட்டார்கள். ஸ்ரீமாவோ அம்மையாரின் 7 ஆண்டு கால ஆட்சி பொருளாதாரத்துறையில் ஓரளவு பசுமையை கொடுத்த போதும் தமிழ் பேசும் மக்களின் இதயங்களுடன் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை யென்பது வெளிப்படையானது. ஒஸி அபய குணசேகர வெல்லக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் குறைவானதே. மேலும் அவரது நிர்வாக ஆளுமைகள் என்பதும் கேள்விக்குறியே.

இவர்களில் பிரேமதாஸாவும், ஒஸியும் மட்டுமே மாகாண அரசு தொடர்ந்தும் பதவியில் நீடிக்குமென கூறியுள்ளனர். இந்தியப் படைகள் வாபஸ் பெறப்படல் வேண்டுமென்பதும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படல் வேண்டுமென்பதும் ஜனாதிபதி வேட்பாளர்களின் ஒருமித்த குரலின் சாரமாகும். எனவே எதிர்வரும் ஜனாதிபதி எடுக்கப் போகும் நடவடிக்கைகளில் தான் மாகாணசபை அரசின் ஆயுட்காலமும் சிறீலங்கா அரசின் உறுதிப்பாடும் தங்கியுள்ளதென்றால் அது மிகையாகாது.

தோழமை நெஞ்சங்களே!

இப்போது நாங்கள் — தமிழ்பேசும் மக்கள் வாழுகின்ற சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இங்கு அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிட்டதென மகிழ்ச்சி கொண்டாட எங்களால் எப்படி முடியும்?

தோழமையுடன்,
ஒரு சாதாரண ஈழத்துப் பிரஜை.

## அலைகடலுக்கு அப்பால்....

யாழ்ப்பாணம்,
19-12-88.

அலைகடல்களுக்கப்பால் அலைபாயும் நெஞ்சங்களுடன் இருக்கும் தோழர்களே !

பிரியமான வணக்கங்கள்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று அதன் முடிவுகளை எதிர் நோக்கி காத்திருக்கும் இவ்வேளையில் இந்த மடலை எழுதலானேன். இங்குள்ள சூழல்கள் மற்றும் செய்திகள் குறித்து அவ்வப்போது தெரியத்தரவில்லையென்று நீங்கள் மனம் வருந்தக்கூடும். ஆனால் வேகமாக மாறுகின்ற சூழலுக்கு முகம் கொடுக்கும் தேவையின் நெருக்கடி ஒருபுறமும், எழுதுகின்ற மடல் உங்கள் கரங்களில் கிடைக்கின்ற வேளையில் அரசியற் சூழலே முற்றாகமாறி காலப் பொருத்தமற்றதாகிவிடுமோ என்ற ஐயம் மறுபுறமும் நெருக்கித் தள்ளியதே மடல்வரைவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகும் என்பதைப் புரிவீர்களென நம்புகிறேன்.

செய்தித்தாள்களில் எமது நாடு பற்றி வெளியாகிவரும் செய்திகளாலும், வானொலி, தொலைக்காட்சி செய்திகளாலும் இங்கு "தமிழ் அரசு" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு விட்டதாக எண்ணி நீங்கள் மகிழக் கூடும். ஆனால் அந்த மகிழ்ச்சி எமக்கு இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். ஏனெனில் அமைதியற்ற சூழ்நிலையில் துப்பாக்கிகளுக்கும், வெடிகுண்டுகளுக்கும் மத்தியில் மக்களின் உண்மையான சுதந்திர உணர்வுகள் எவ்வாறு வெளிப்படக்கூடும்? என்பது ஒருபுறமிருக்க; எமது மக்களின் பிரதிநிதிகளை இனம்காட்ட எமது மக்களுக்கே பூரண சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

சுமார் 30%க்கும் அதிகமான மக்கள் சுமார் 80%மான வாக்குகளை பிரயோகித்து பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர். கொழும்பின் பிரபல வர்த்தகர் பௌசி கடத்தப்பட்டு தூத்துக்குடியில் கண்டுபிடிக்கப்பட்டமை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். மாகாண சபையில் அங்கம் பெறும் ஒரு குழுவின் சில நபர்களே இச்சம்பவத்துக்குப் பொறுப்பாளிகள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் எமது ஆட்சியாளர்களின் தரம்பற்றி அதிகம் விவரிக்க வேண்டியிருக்காது. எது எப்படியிருப்பினும் எமக்கான ஒரு அரசும், அமைச்சரவையும் அமைக்கப்பட்டு விட்டது.

இந்த அரசு அமைக்கப்பட்டதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளாக தம்மை இனங்காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் ஒரு சாராருக்கு வழங்கப்பட்டுவிட்டது. இது காலவரையில் தமிழ்பேசும், மக்களின் ஒட்டுமொத்தமான பிரதிநிதிகளாக தம்மை மட்டுமே இனம் காட்டி இலங்கை, இந்திய அரசுகளுடன் ஆயுதப் போராட்டத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈடுபட்டுவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கையிலிருந்த அரசியற் பிடிப்பு நழுவிச் செல்ல வைக்கும் ஆரம்பமாகும். ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இதுவரை தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்க இலங்கை-இந்திய இராணுவங்களால் இயலவில்லை. இந்திய இராணுவம் புலிகளை ஒரு புறத்திற்கு ஒதுக்கிச் சென்று விட்ட தென்பது உண்மையே. அதாவது இந்திய இராணுவத்தின் செயற் பாடுகளால் விடுதலைப்புலிகள் கணிசமானளவு பலவீனப்படுத்தப்பட்ட போதும் தமிழ்பேசும் மக்களினது பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்ற அவர்களது அத்திவாரத்தில் எந்த மாறுதலும் இல்லை ஆகவே மாகாண அரசு தனது உறுதிப்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ள இருமுனைகளில் போராடவேண்டியுள்ளது.

1. தமிழ்பேசும் மக்களின்து பிரதிநிதித்துவத்தை இவர்களிடமிருந்து மீட்டெடுக்க அல்லும் பகலும் இடையறாது முயலும் விடுதலைப் புலிகள்.
2. தமிழ்பேசும் மக்களின் தீர்க்கப்படாத குறைபாடுகளை வென் றெடுக்க சிறீலங்கா அரசுடன் நடத்தப்படவேண்டிய இராஜ தந்திரப் போராட்டம்.

முன்னையதைப் பொறுத்தவரை குடிமக்கள் தொண்டர்படை என ஸ்தாபிக்கப்படும் அமைப்பின் மூலம் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இப்படையில் அங்கம் வகிப் பவர்கள் தாம் ஏற்றுள்ள பாத்திரத்தின் பொறுப்பை உணர்ந்தவர் களாக தென்படவில்லை. இதனாலேயே பழிக்குப் பழிவாங்கும் கொலை வெறியும் பொதுமக்களை அச்சுறுத்தும் ஆயுதப்பாவனையும் இன்னபிறவுமாக நாட்கள் நீடிக்கின்றன. சிறீலங்கா இராணுவத் தையும், இந்திய இராணுவத்தையும் பார்த்துப் பழக்கப்பட்ட மக்கள் தமது சொந்தப் புதல்வர்களின் அடாவடித்தனங்களையும், அராஜ கங்களையும் கண்டு அதிருப்தியுற்ற நிலையில் மனம் புழுங்குகின் றனர். இத்தகைய செயற்பாடுகளை தட்டிக் கேட்பவர்கள் கண்மூடித் தனமாக விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களெனக் குற்றஞ்சாட்டப் படுகின்றனர்.

இவை ஒரு புறமிருக்க, சிறீலங்கா அரசின் செயற்பாடுகளை யும் கவனிக்க வேண்டும். முன்னர் 1980ல் தானே கொண்டு வந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை தானே செயலிழக்க செய்து வெற்றிகண்டிருந்தது சிறீலங்கா அரசு. இந்த மாகாண சபைகளுக் கான தேர்தல்களில் தென்னிலங்கைப் பகுதிகளில் நடத்தப்பட்ட தேர்தல்களை அரசு தனக்கான பலப்பரீட்சைக் களமாக பயன்படுத்திக் கொண்டது. வடக்கு, கிழக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தா திருக்கவும், அதனை தள்ளிப் போடவும் பகீரதப் பிரயத்தனம் கொண்டிருந்ததும் ஒருவகையில் உண்மையே. இவற்றைக் கடந்து



மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னும் கூட அதன் செயற்பாடு களுக்கு முட்டுக்கட்டைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மாகாண சபை அலுவலகமாக்கப்பட்ட திருமலை நகரசபை மண்டபத்துக்கு வர்ணம்பூசும் செலவைத்தானும் ஏற்றுக் கொள்ள சிறீலங்கா அரசு தயாராக இல்லையென்றால் நிலைமையைப் புரிந்து கொள்வீர்கள் தானே? இத்தகைய முட்டுக்கட்டைகளின் ஒரு கட்டம்தான் சிறீலங்கா அரசபடைகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகமாகும். இச்சம்பவத்தில் ஏறத்தாழ 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்விடத்தில் தமிழ்பேசும் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சனை கள் என்ன? என்ற அடிப்படைக் கேள்வி எழுவது இயல்பே. முதலில் ஒப்பந்தத்தில் விதந்துரைக்கப்பட்ட பலவிடயங்களே இன்னமும் அமுல் நடத்தப்படவில்லையென்பது கவலையுடன் சுட்டிக்காட்டப் படவேண்டியதாகும். உதாரணமாக,

1. சிறைக்கைதிகளின் விடுதலை.
2. ஊர்க்காவற்படை (Home guards), விசேட அதிரடிப்படை (S. T. F.) போன்றன விலக்கப்படல்.
3. குடியேற்றங்கள் நிறுத்தப்படல் என்பன போன்றவற்றைச் சுட்டிக்காட்டமுடியும். போராளிகளிடமுள்ள ஆயுதங்களைக் களைவ தில் கூடிய நாட்டம் காட்டும் இந்திய அரசும், இராணுவமும் சிறீலங்கா அரச தரப்பில் நிறைவேற்றப்படவேண்டிய இந்த அம்சங் களையிட்டு அலட்டிக் கொள்ளாமலிப்பது எமது மக்களுக்குப் பெரும் விசனத்தையும், கவலையும் ஏற்படுத்துவதாகும். எமது மக்கள் பாரிய இழப்புகளையும் வேதனைகளையும் கடந்து முன்னெடுத்து வந்தது, தமது அரசு என்ற ஒரு பொம்மையை நிறுவுவதற்கல்ல. தமது வாழ்வை வளம்படுத்தவும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத் தவும் வல்ல ஒரு அரசமைப்பைத் தோற்றுவிக்கவே என்பது வெளிப்படையானது.

ஆனால், இத்தகைய பாரிய பொறுப்பையும், கடமையையும் தங்கள் தோள்களில் ஏற்றுள்ளவர்கள் வெறுமனே குழந்தைத்தன மாக நடந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் ஏராளம். இதனால் இவர்கள் தமது அபிலாசைகளைப் பிரதிபலிக்க மாட்டார்கள் என்றே பொது மக்கள் பலரும் கருதுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, தென்னிலங்கை அரசியற் சூழலும் அவதானிக்கப்பட வேண்டியதாகும். இலங்கை-இந்திய ஒப்பந்தத் தால் இலங்கையில் அதிகம் வலுப்பெற்ற சக்தி ஒன்று உண்டு என்றால் அது J.V.P ஆகும். மக்கள் விடுதலை முன்னணி எனப் பெயரிடப் பட்ட இவ்வணியினர் தமது "அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு" இந்தியப்படைகளின் பிரவேசம், தமிழர்களுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் அரசியல் உரிமைகள் என்பனவற்றையே தீனியாகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்